### அருப்புக்கோட்டையில்

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ பாசறைக் கூட்டம்: அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் பங்கேற்பு



**அருப்புக்கோட்டை, ஜூன் 30-**

அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.க. தகவல் தொழில்நுட்ப பிரிவு சார்பில் ஓரணியில் தமிழ்நாடு கொண்டு வருவது குறித்த பாசறை கூட்டம் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் தலைமையில் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் பாசறைப் பொறுப்பாளர்களுக்கு தேர்தல் பிரச்சாரம் குறித்து ஆலோசனைகளை வழங்கி பேசினார்.

அமைச்சர் பேசுகையில், ஆளும் மத்திய அரசு தமிழகத்தை வஞ்சித்து வருகிறது. தமிழ்நாட்டை இந்தியாவுடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது என்று வானதி சீனிவாசன் கூறியுள்ளார். மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய மொழி தமிழ் மொழி. அதனைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் தான் முதல்-அமைச்சர் மு.க .ஸ்டாலின் ஓரணியில் தமிழ் நாட்டை கொண்டு வருவதற்கு முனைப்பு காட்டி வருகிறார். தமிழகத்தில் தான் பட்டதாரிகள், டாக்டர்கள் ஊருக்கு ஒருவர் இருக்கின்றனர்.

ஒவ்வொரு காரியத்தை செய்யும்போது முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் சிந்தித்து செயல்படுத்தி வருகிறார். வீட்டில் போய் பெற்றோர்களை சிரமப்படுத்த கூடாது என்பதற்காக மாணவ, மாணவிகளுக்கு ரூ.ஆயிரம் வழங்கி வருகிறார் . இந்தக் குழுவில் செயல்படுபவர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாக சென்று அரசின் உதவி அவர்களை சென்றடைந்ததா என்பதனை கேட்டு அவர்களுக்கு அரசு உதவிகள் கிடைக்காத பட்சத்தில் அவர்களுக்கு என்ன தேவை என்பதனைக் கேட்டு அதனை செயலி மூலம் பதிவு செய்து தீர்வு காண வேண்டும். அந்தந்த மக்கள் சொல்லும் குறைகளை பதிவு செய்து அதற்கான தீர்வை செய்து முடிக்க வேண்டும். ஒவ்வொருவரும் குறைந்த பட்சம் 30 பேரை சேர்க்க வேண்டும் என்று பேசினார்.

நிகழ்ச்சியில் தொகுதி பொறுப்பாளர் மாரியப்பன் கென்னடி, முன்னாள் ஒன்றிய குழு தலைவர் சுப்பாராஜ், தி.மு.க. நகர செயலாளர் மணி, ஒன்றிய செயலாளர் பாலகணேஷ், பொன்ராஜ் மாவட்ட இளைஞரணி அணி துணை அமைப்பாளர் பாபுஜி, நகர மன்ற துணைத் தலைவர் பழனிச்சாமி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் அழகு ராமானுஜம் கவுன்சிலர்கள் இளங்கோ ஜோதி ராமலிங்கம் மற்றும் தி.மு.க. தகவல் தொழில்நுட்ப கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# நத்தம் அருகே குட்டுப்பட்டியில் துணை சுகாதார நிலையம் திறப்பு



**நத்தம், ஜூன் 30-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே குட்டுப்பட்டியில் புதிய துணை சுகாதார நிலையம் திறப்பு விழா மற்றும் லிங்கவாடி, கோமனாம்பட்டி பகுதிகளில் புதிய துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான பூமி பூஜை விழாவை காணொலி காட்சி மூலம் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்து பூமி பூஜைகளை தொடங்கி வைத்தார்.

அதனை தொடர்ந்து குட்டுப்பட்டியில் துணை சுகாதார நிலையத்தை முன்னாள் எம்.எல்.ஏ ஆண்டிஅம்பலம் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இதில் தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் சேக் சிக்கந்தர்பாட்சா, ரத்தினக்குமார், பழனிச்சாமி, நகர செயலாளர் ராஜ்மோகன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள், மருத்துவ துறை அதிகாரிகள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# ராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேர் இலங்கை கடற்படையினரால் கைது



**ராமேசுவரம், ஜூன் 30-**

இந்திய சர்வேதேச கடலோரப்பகுதியில் நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்களின் ஒரு படகையும் படகிலிருந்து எட்டு மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் சனிக்கிழமை நள்ளிரவில் கைது செய்தனர்

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் துறைமுக கடலோரப் பகுதியில் இருந்து சனிக்கிழமை காலையில் ராமேஸ்வரம் ராமகிருஷ்ணாபுரம் பகுதியைச் சேர்ந்த பாலமுருகன் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் முனிஸ்வரன் (35), செல்வம் (28), கல்யாணராமன் (45), செந்யது இப்ராஹிம் (35), அண்ணாமலை (55),ஜேசு (39) உள்பட 8 மீனவர்கள் மீன்பிடிக்க சென்றனர்.

மீனவர்கள் இந்திய சர்வதேச கடலோரப் பகுதியில் இந்திய கடல் எல்லைக்குள் நடுக்கடலில் மீன் பிடித்து கொண்டு இருந்துள்ளனர். அப்போது அன்று நள்ளிரவில் அவ்வழியாக இலங்கை கடற்படையினர் சிறிய பிளாஸ்டிக் படகில் ரோந்து பணியில் ஈடுபட்டு வந்துள்ளனர். அப்போது இந்திய எல்லைக்குள் அத்துமீறி இலங்கை கடற்படையினர் வந்து அப்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்த எட்டு மீனவர்களையும் கைது செய்து பின்னர் படகை சிறை பிடித்து மன்னார் கடற்படை முகாம் அழைத்துச் சென்றனர். அங்கு விசாரணை செய்து மன்னார் போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

போலீசார் மீனவர்கள் மீது எல்லைதாண்டி மீன்பிடிக்க வந்ததாக வழக்கு பதிந்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் நேற்று ஞாயிற்றுக்கிழமை நீதிமன்றம் விடுமுறை என்பதால் இந்த எட்டு மீனவர்களையும் இன்று திங்கட்கிழமை போலீசார்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

### எடப்பாடி பழனிசாமியின் 71-வது பிறந்த நாள் விழா:

### மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சிறுபான்மை பிரிவு சார்பில்

# எம்.ஏ.நாசர் ஏற்பாட்டில் சிறப்பு தொழுகை மற்றும் பொதுமக்களுக்கு பிரியாணி

### முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ வழங்கினார்



**மதுரை, ஜூன் 30-**

அ.தி.மு.க.பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியன் 71- வது பிறந்த நாள் விழா முன்னிட்டு மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சிறுபான்மை பிரிவு சார்பில் எம்.ஏ.நாசர் ஏற்பாட்டில் சிறப்பு தொழுகை மற்றும் பொதுமக்களுக்கு பிரியாணியை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ.வழங்கினார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிச்சாமியின் 71-வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சிறுபான்மை பிரிவு சார்பில் அதன் மாவட்ட செயலாளர் எம்.ஏ.நாசர் ஏற்பாட்டில் மதுரை தெற்கு வாசல் முகைதீன் ஆண்டவர் தர்காவில் எடப்பாடி பழனிசாமி பல்லாண்டு காலம் வாழவும், மீண்டும் 2026-ல் தமிழக முதலமைச்சராக வரவேண்டியும் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் அ.தி.மு.க.வினர் சிறப்பு தொழுகை செய்து பொதுமக்களுக்கு அன்னதானம் (பிரியாணி) வழங்கினர். இதில் நிர்வாகிகள் எம்.எஸ் பாண்டியன்,ஆர் அண்ணாதுரை, வில்லாபுரம் ராஜா பா.குமார்,சக்தி மோகன்,பரவை ராஜா,கு.திரவியம், எம்.எஸ்.கே.மல்லன், எஸ்.டி ஜெயபாலன், மீனவர் அணி மாவட்ட செயலாளர் பா.பாலராமச்சந்திரன், ஜோசப் தனிஸ்லாஸ், ஜெ.இஷிகா நாச்சியார்,புதூர் சந்திரன்,சக்தி விநாயகர் பாண்டியன், பிஆர்சி மகாலிங்கம், வி.பி. ஆர் செல்வகுமார், ஏ.பார்த்திபன், ஓட்டுனர் அணி திருமுருகன், தளபதி மாரியப்பன், ஜெயகுமார், குமுதா,மார்க்கெட் செந்தில்குமார், எம்ஜிஆர் மன்றம் முருகதாசன், ஏ.மாயதேவன், மார்க்கெட் மார்நாடு, கார்னர் பாஸ்கரன், டிராவல்ஸ் மணிமாறன்,நூர் முஹம்மது, ஏஜாஸ் உசேன், முகமது அப்துல்லா, முகமது நாசர், பாசில் அஹமது, பால் பாண்டி, சுபேதார், சித்திக், கிறிஸ்டோபர், தெற்கு வாசல் மொய்தீன், தெற்கு வாசல் ஜின்னா, கந்தகுமார், சுப்பையா, பூக்கடை ஐயப்பன், கோயில் செழியன், நாகேந்திரன் குட்டி(எ)கருப்பையா, ஐடிவிங்க் செல்வகுமார்,மீனவர் அணி வீரணன், பெருமாள், மேலவாசல் ராமச்சந்திரன், சேஷாத்திரி, பாக்கியராஜ், அந்தோணிராஜ்,சாம்பிராணி பரமசிவம்,அருண் பாண்டி, செல்வப்பாண்டி, கொடி முத்து,தமயந்தி பால்பாண்டி, இளைஞரணி செல்வகுமார் அர்ஜுன பிரபு ராஜ்குமார்,மாதுளை குமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# ஜெயலலிதா புகைப்படத்தை அவமதித்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## திண்டுக்கல் சீனிவாசன் வலியுறுத்தல்



**திண்டுக்கல், ஜூன் 30-**

வேடசந்தூர் மின்வாரிய அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா புகைப்படம் அவமதிக்கப்பட்டதற்கு கழகப் பொருளாளரும், முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சி.சீனிவாசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூரில் நடைபெற்ற மின்வாரிய அலுவலக திறப்புவிழா நிகழ்ச்சியில் தி.மு.க. அரசின் அலட்சியப் போக்கின் அடையாளமாக தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா புகைப்படத்தை குப்பையில் வீசியுள்ள செய்தி படத்துடன் நாளிதழில் வந்துள்ளது.

ஐந்து முறை தமிழகத்தில் முதல்வராக இருந்து, தமிழக மக்களின் இதயங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புகைப்படத்தை குப்பையில் வீசிய செயல் அ.இ.அ.தி.மு.க தொண்டர்களின் மனதை மட்டுமல்லாது பொதுமக்களின் மனதையும் புண்படுத்தியுள்ளது. இச்செயலை வன்மையாக கண்டிக்கிறோம்.

முறையற்ற இச்செயலில் ஈடுபட்ட திண்டுக்கல் மின்வாரியம் வருத்தம் தெரிவிப்பதோடு, சம்பந்தப்பட்ட ஊழியர்கள் மீது துறை ரீதியான நடடிவக்கை எடுக்க வலியுறுத்துகின்றேன். தவறும்பட்சத்தில் கழகப் பொதுச் செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடியார் அனுமதியோடு திண்டுக்கல் மாவட்ட அ.இ.அ.தி.மு.க சார்பாக தி.மு.க ஆட்சியின் இந்தச் செயலைக் கண்டித்து திண்டுக்கல் மாவட்ட மின்வாரிய கண்காணிப்பு பொறியாளர் (வடக்கு) அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ஹானிமன் தின இயக்கத்தை முன்னிட்டு

# திருமங்கலத்தில் ஓமியோபதி மருத்துவ முகாம் நடந்தது

**திருமங்கலம், ஜூன் 30-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் மக்களுடன் ஓமியோபதி அமைப்பின் சார்பில் ஹோமியோபதியின் நிறுவனர் டாக்டர் சாமுவேல் ஹானிமன் தின இயக்கம்-2025ஐ முன்னிட்டு மாபெரும் ஓமியோபதி மருத்துவ முகாம் நடைபெற்றது.

திருமங்கலம் வி.எஸ்.ஆர் திருமண மண்டபத்தில நடைபெற்ற இந்த மருத்துவ முகாமினை தொழிலதிபர் ஜெயம் ஜெயராமன் ரோட்டரி கிளப் தலைவர் குருசாமி ஆகியோர் துவக்கி வைத்தனர். மக்களுடன் ஓமியோபதி அமைப்பின் நிறுவன தலைவர் டாக்டர் உ.ச.உ.கல்பனா, தலைவர் டாக்டர்.தமிழன் செயலாளர் சு.அரிசுதன், பொருளாளர் சி.ரமேஷ் ஆகியோர் ஏற்பாட்டின் பேரில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில் தமிழகத்தின் பல்வேறு இடங்களிலிருந்து வந்திருந்த சிறப்பு ஓமியோபதி டாக்டர்கள் ஜி.ரம்யா, பி.கிருத்திகா, கு.ரோஹிந்த், எஸ்.கீர்த்திகா, டி.சிந்துஜா, எம்.தமிழரசன், எம்.ஆலன் ஆகியோர் கலந்து கொண்டு முகாமில் கலந்து கொண்ட நூற்றுக்கணக்கான பொதுமக்களுக்கு சிறப்பு சிகிச்சை அளித்தனர். அப்போது ஒற்றை தலைவலி, இரத்த அழுத்தம், சிறுநீரக தொற்று உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கும் தேவைக்கேற்ப இலவச ரத்த அழுத்தம் இரத்த பரிசோதனை மற்றும் எக்ஸ்ரேக்கள் எடுத்து சிகிச்சையளிக்கப்பட்டது.

### எடப்பாடி பழனிசாமியின் 72- வது பிறந்த நாள் விழா:

# மருத்துவரணி சார்பில் டாக்டர் பா.சரவணன் ஏற்பாட்டில் மாபெரும் ரத்ததான முகாம்

### நடிகை காயத்ரி ரகுராம் துவக்கி வைத்தார்



**மதுரை, ஜூன் 30-**

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் 72- வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அ.தி.மு.க. மருத்துவரணி சார்பில் மாநில மருத்துவரணி இணை செயலாளர் டாக்டர் பா.சரவணன் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் ரத்ததான முகாமினை நடிகை காயத்ரி ரகுராம் துவக்கி வைத்தார்.

அ.தி.மு.க.பொதுச் செயலாளரும், எடப்பாடி பழனிசாமியின் 72-வது பிறந்த நாளை முன்னிட்டு, அ.தி.மு.க.மருத்துவரணி சார்பில் மதுரை சரவணா மருத்துவமனையில் இரத்ததான முகாம் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி மாநில மருத்துவரணி இணைச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் பா.சரவணன் தலைமையில் நடைபெற்ற இரத்ததான முகாமை அ.தி.மு.க.மகளிரணி துணைச் செயலாளரும், நடிகையுமான காயத்திரி ரகுராம் துவக்கி வைத்தார். இதில் 72 நபர்கள், நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் இரத்த தானம் வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் முனிச்சாலை சரவணன், பைக்காரா செழியன், ராமசுப்பு, சுந்தர், பாக்கியராஜ், ரஞ்சித் முகமது, புரட்சிக்கண்ணன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இதனை தொடர்ந்து மாநில மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் நிருபர்களிடம் கூறுகையில்-

அ.தி.மு.க.பொது செயலாளர் எடப்பாடியாரின் 72-வது பிறந்த நாளையொட்டி கழக மருத்துவரணி சார்பில் வருடந்தோறும் பல்வேறு நலத்திட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.அறுபடை முருகன் கோவில்களில் வழிபாடு நடத்தப்பட்டது.அதனை தொடர்ந்து பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டது.தற்போது ரத்ததான முகாம் நடத்தப்பட்டுள்ளது.முதலமைச்சர் ஸ்டாலின் திமுக ஒன்றும் ஊதி அணைக்க கூடிய தீக்குச்சி இல்லை என்று கூறியுள்ளார். இன்றைக்கு தமிழக மக்கள் எரிமலையாக உள்ளனர் என்பது முதல்வர் ஸ்டாலினுக்கு தெரியுமா?.

இன்றைக்கு மளிகை பொருள் விலை உயர்வு, பால் விலை உயர்வு இதன் மூலம் பெண்கள் வயிறு எரிந்து வருகிறது. விவசாயிகள் உரிய கடன் வழங்கவில்லை. நலத்திட்டங்கள் வழங்கவில்லை. இதனால் விவசாயிகள் வயிறு பற்றி எரிகிறது.மாணவர்களுக்கு மடிக்கணி திட்டம் வழங்கவில்லை. இதனால் மாணவர்கள் வயிறு பற்றி எரிகிறது.தாலிக் தங்கம் திட்டம் வழங்கவில்லை. இதனால் இளம் பெண்கள் வயிறு பற்றி எரிகிறது. இதையெல்லாம் பார்க்கும் பொழுது ரோம் நகர் பற்றி எரியும் போது நீரோ மன்னன் பிடில் வாசிப்பது போல இன்றைக்கு முதலமைச்சர் உள்ளார். திமுக ஆட்சியைஅப்புறப்படுத்த 2026 சட்டமன்ற தேர்தலில் எடப்பாடியாரின் தலைமை கூட்டணி அமையும், தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு எடப்பாடியாரின் தலைமையில் அம்மாவின் ஆட்சி மலரும். இவ்வாறு அவர் கூறினார்.

பின்னர் அ.தி.மு.க.மகளிரணி துணைச் செயலாளர் காயத்திரி ரகுராம் நிருபர்களிடம் கூறுகையில்- அ.திமு.க.. ஆட்சிக்காலத்தில் கொண்டு வந்த திட்டங்கள் அனைத்தையும் திமுக நிறுத்தியுள்ளது.2026 ஆம் ஆண்டில் அதிமுக ஆட்சிக்கு வந்தவுடன் அதிமுகவின் மக்கள் நலத்திட்டங்கள் மீண்டும் செயல்படுத்தப்படும்.நடிகர்கள் மட்டும் போதை பொருளை பயன்படுத்துவதில்லை சாமானிய மக்கள் கூட போதைப் பொருளை பயன்படுத்தக்கூடிய நிலைக்கு தமிழ்நாடு வந்துள்ளது. தமிழ்நாட்டில் மக்கள் சந்திக்கக்கூடிய பிரச்சனைகளை மையப்படுத்தி அதிமுக தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொள்ள உள்ளது.

திமுக மக்கள் பிரச்சினைகளை பேசுவதில்லை.திமுக மக்களின் பிரச்சினைகளை திசை திருப்பும் வேலைகளில் ஈடுபட்டு வருகிறது. பெண்கள் வன்கொடுமைக்கு உள்ளாவதற்கு மிக முக்கிய காரணமாக டாஸ்மாக் உள்ளது. முதலமைச்சர் ஸ்டாலின் தமிழ்நாட்டை திராவிட மாடலாக மாற்ற முடியாது. அவரே ஒரு மாடல் போல தான் சுற்றிக் கொண்டிருக்கிறார். தமிழகத்தில் மதுவால் இளம் விதவைகள் அதிகரித்து விட்டனர்.அதே போன்று திமுக ஆட்சியில் லைசன்ஸ் இல்லாத பார்கள் செயல்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# வத்தலக்குண்டு அருகே எம்.வாடிப்பட்டியில் புதிய ரேசன் கடைக்கான பூமி பூஜை



**வத்தலக்குண்டு, ஜூன் 30-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு அருகே உள்ள சேவுகம்பட்டி பேரூராட்சி எம்.வாடிப்பட்டியில் ரூ.13 லட்சம் மதிப்பீட்டில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தில் ரேசன்கடை கட்ட பூமி பூஜை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு சேவுகம்பட்டி பேரூராட்சி மன்ற தலைவர் வனிதா தங்கராஜன் தலைமை தாங்கினார்.

தி.மு.க. வடக்கு ஒன்றிய செயலாளர் கே பி முருகன், சேவுகம்பட்டி பேரூர் செயலாளர் தங்கராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செயல் அலுவலர் ரமேஷ் பாபு வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக சச்சிதானந்தம் எம்.பி. கலந்து கொண்டு பூமி பூஜை செய்து அடிக்கல் நாட்டினார்.

ரேசன்கடை பூமி பூஜை இந்நிகழ்ச்சியில் சேவுகம்பட்டி பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் தெய்வராணி விஜயன், பேரூராட்சிகளின் பொறியாளர் கருப்பையா, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் தனபால், தவபாண்டியன், பாலமுருகன், மாரியப்பபிள்ளை, கோகிலா, நாகராணி, பாண்டியம்மாள், சாந்தி, அரசு ஒப்பந்ததாரர் கோபி மற்றும் சேவுகம்பட்டி நகர நிர்வாகிகள், ஒன்றிய நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் முடிவில் பேரூராட்சியின் இளநிலை உதவியாளர் அம்மமுத்து நன்றி கூறினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



**திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் நத்தம் இரா.விசுவநாதன் ஆலோசனையின்படி, கழக அம்மா பேரவை இணைச் செயலாளர், முன்னாள் நத்தம் ஒன்றிய பெருந்தலைவர் ஆர்.வி.என்.கண்ணன் தலைமையில் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.ஏ.முருகன் முன்னிலையில் தோட்டனூத்து ஊராட்சியில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள, பூத் கமிட்டி நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. உடன் முன்னாள் மாநில பொதுக்குழு உறுப்பினர் நெப்போலியன், ஒன்றிய கழக பொருளாளர் மகாராஜன், மாவட்ட தொழிற்சங்க செயலாளர் முத்தையா, மாவட்ட பிரதிநிதி முருகராஜ், ஒன்றிய மகளிர் அணி செயலாளர் பழனியம்மாள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.**

# மேலூர், கொட்டாம்பட்டி பகுதியில் கருணாநிதி 102-வது பிறந்தநாள் விழா

## அமைச்சர் மூர்த்தி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்



**மேலூர், ஜூன் 30-**

திராவிட இயக்கத்தின் முன்னாள் தலைவரும், தமிழ்நாடு முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு கொட்டாம்பட்டியில் உள்ள பொட்டப்பட்டி, சூரப்பட்டி, கருங்காலக்குடி, வஞ்சிபட்டி, குன்னங்குடிபட்டி, அட்டப்பட்டி, செம்மினிபட்டி, ஆட்டுக்குளம், பூஞ்சுத்தி ஆகிய கிராமங்களில் திமுக சார்பில் குடும்ப அட்டை வைத்துள்ள அனைவருக்கும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மேலூர் தொகுதி பொறுப்பாளர் வ.து.ந.ஆனந்த், தலைமை செயற்குழு உறுப்பினர் கரு. தியாகராஜன், கொட்டாம்பட்டி மேற்கு ஒன்றிய செயலாளர் பழனி, கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றிய செயலாளர் ராஜராஜன், கொட்டாம்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, மேலூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பாலகிருஷ்ணன், மேலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் ராஜேந்திர பிரபு, மேலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் குமரன்,

மேலூர் நகர் செயலாளர் முகமது யாசின், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் நாவினிபட்டி வேலாயுதம், பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ், தற்காகுடி சரவணன், குமரேசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கொட்டாம்பட்டி பாலசுப்பிரமணியன், கம்பூர் கதிரேசன், கேசம்பட்டி ஜோதிலட்சுமி ராஜா, சேக்கிப்பட்டி பிரியா பிரபு, செம்மினிபட்டி பாட்சா, ஆட்டுக்குளம் சிவன்ராஜன், மாவட்ட பிரதிநிதி கண்ணன், துணைச்செயலாளர்கள் ராஜா, நதியா சிவத்த கண்ணு, அட்டபட்டி குமார், யாகியகான், பா.ஜோதிலிங்கம், கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# புகையிலை விற்றவர் கைது

**நத்தம், ஜூன் 30-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மற்றும் சுற்றுவட்டார கிராம பகுதிகளில் பெட்டிக்கடைகளிலும், மளிகைக்கடைகளிலும், குடோன்களில் பதுக்கி வைத்தும் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நத்தம் போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அதன் பேரில் நத்தம் மற்றும் சுற்றுவட்டார கிராம பகுதியில் உள்ள கடைகளில் போலீஸ் சப்- இன்ஸ்பெக்டர் கிருஷ்ணகுமார் தலைமையிலான போலீசார் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது வத்திபட்டி அருகே புதுக்கோட்டை பகுதியில் உள்ள ஒரு பெட்டிக்கடையில் சோதனை செய்தபோது விற்பனை செய்வதற்காக புகையிலைப் பொருட்கள் வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து புகையிலை பொருட்கள் வைத்திருந்த அதே பகுதியை சேர்ந்த ராஜேந்திரன் (52) என்பவரை கைது செய்த நத்தம் போலீசார் அவரிடமிருந்து 12 புகையிலை பாக்கெட்டுகளை பறிமுதல் செய்தனர்.

## விருப்பாச்சியில்

# தமிழக அரசின் சாதனை விளக்க தெருமுனை பிரசார கூட்டம்



**ஒட்டன்சத்திரம், ஜூன் 30-**

ஒட்டன்சத்திரம் மேற்கு ஒன்றிய திமுக இளைஞரணி சார்பில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆலோசனையின் பேரில் தமிழ்நாடு அரசின் நான்காம் ஆண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம் விருப்பாச்சியில் ஜீவா நகரில் ஒன்றிய செயலாளர் தர்மராஜன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் தலைமைக் கழக இளம் பேச்சாளர்கள் செல்வகுமார், கேத்தரின் மெர்லினா ஆகியோர் தமிழ்நாடுஅரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்று செயல்படுத்திய நான்காண்டு சாதனைகள் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாண்டியராஜான், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அசோக் வேலுச்சாமி உள்ளிட்ட குப்புசாமி, சிவராஜ், இளைஞர் அணி நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## பாலமேடு அருகே

# மேட்டுப்பட்டியில் நலத்திட்ட உதவிகள்

## வெங்கடேசன் எம்.எல்.ஏ. வழங்கினார்



**அலங்காநல்லூர்,ஜூன் 30-**

மதுரை மாவட்டம் பாலமேடு அருகே உள்ள 66.M.மேட்டுப்பட்டி ஊராட்சியில் சோழவந்தான் தொகுதி தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இந்த விழாவில் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், கலந்து கொண்டு பேசினார்.

அவர் பேசியதாவது: தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் ஆட்சியில் ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். மகளிருக்கு ஆயிரம் ரூபாய், மகளிர் இலவச பேருந்து பயணம், முதியோர் உதவித்தொகை, மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடன் தள்ளுபடி போன்ற எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்திக் கொண்டுள்ளார். என்று தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். தொடர்ந்து சேந்தமங்கலம், பள்ளபட்டி, உசிலம்பட்டி, பொந்துகம்பட்டி, ஆகிய கிராமங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ், பரந்தாமன், மாநில பொதுக்குழு உறுப்பினர் முத்தையன், ஒன்றிய துணைச் செயலாளர் அருண்குமார், ஒன்றிய பொருளாளர் சுந்தரராஜன், நகர செயலாளர் மனோகரவேல் பாண்டியன், பேரூராட்சி தலைவர் ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், துணைத் தலைவர் சாமிநாதன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள்

பெத்தின்ராஜா, காயத்ரி இதயச்சந்திரன், தனுஷ்கோடி, செந்தில்குமார், அரசு வழக்கறிஞர் பார்த்தசாரதி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சந்தனகருப்பு, சோழவந்தான் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் தவசிஷ், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்த், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரியாஸ் கான், மற்றும் முடுவார்பட்டி சேகர், பொறியாளர் அணி பாலகிருஷ்ணன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# செக்கானூரணியில் 28 வது வாசிப்பு இயக்க முகாம்



**திருமங்கலம், ஜூன் 30-**

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்கத்தின் 28வது வாசிப்பு இயக்க முகாம் செக்கானூரணி அருகேயுள்ள க.பாறைப்பட்டியில் நேற்று சிறப்பாக நடைபெற்றது. எழுத்தாளர் வல்லிக்கண்ணன் எழுதி சாகித்திய அகாதமி விருது பெற்ற புதுக்கவிதை தோற்றமும் வளர்ச்சியும் புத்தகம் இந்த வாசிப்பு முகாமில் அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த முகாம் ஒருங்கிணைப்பாளர் செ.தமிழ் ராஜ் தலைமையில் நடைபெற்றது.மாவட்ட தலைவர் வெண்புறா நோக்கவுரையாற்றினார்.மாவட்டத்தின் 9 கிளைகளிலிருந்து 60க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்ட இந்த முகாமை துவக்கி வைத்து மாவட்ட செயலாளர் லெனின் பேசினார். இம்முகாமிற்கு மதுரை அரசு கலை கல்லூரி முதல்வர் புவனேஸ்வர், கிளைச் செயலாளர் சிவமணி, மாநில செயற்குழு உறுப்பினர் கரிசல் கருணாநிதி ஆகியோர் முன்நின்று நிகழ்வுகளை சிறப்பாக நடத்தினார்கள்.

அப்போது புத்தகம் விமர்சனம் குறித்து 28 பேர் விவாதித்தனர். இந்நிகழ்வை பசுமலை பாரதி ஒருங்கிணைத்து நடத்தினார். வாசிப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் செ.தமிழ் ராஜ் எழுதிய எழுத்தின் பாவனைகள் நூல் அப்போது வெளியிடப்பட்டது. முகாமின் நிறைவில் சிவமணி நன்றி கூறினார்.

# நத்தத்தில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்க மாநாடு

**நத்தம், ஜூன் 30-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் உள்ள அரசு சமுதாய கூடத்தில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் தாலுகா மாநாடு நடந்தது. இதற்கு தாலுகா தலைவர் ரஞ்சித் தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் பாலாஜி, தாலுகா செயலாளர் பிரவீன்குமார், பொருளாளர் சுரேந்திர பிரசாத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் கிராம புறங்களுக்கு இயக்கப்படும் பழுதடைந்த பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளை இயக்கிடவும்,நத்தம் பகுதியில் மாம்பழ கூழ் தொழிற்சாலை அமைக்க அரசை வலியுறுத்துவது உள்ளிட்ட 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மாநாட்டில் விளக்கி பேசப்பட்டு தீர்மானம் நிறைவேற்றபட்டது. இதில் ஜனநாயக வாலிபர் சங்க தாலுகா குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## திருச்சுழி ஒன்றியத்தில்

# இந்திய கம்யூனிஸ்ட் மாநாடு குறித்த இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணி



**விருதுநகர், ஜூன் 30-**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 25 வது மாவட்ட மாநாடு ஜூலை 3 மற்றும் 4 தேதிகளில் விருதுநகரில் நடைபெறுகிறது. இந்த மாநாடு குறித்து விளக்கும் விதமாக திருச்சுழி ஒன்றியம் முழுவதும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் இருசக்கர வாகன பேரணி விழிப்புணர்வு பிரச்சார இயக்கம் நடைபெற்றது.

ஒன்றிய செயலாளர் செல்வம் தலைமையில் நடைபெற்ற இந்த பேரணி பூலாங்கால் பகுதியில் இருந்து துவங்கியது. அங்கிருந்து பரளச்சி, மேலையூர், தொப்பலாக்கரை, கானா விளக்கு, ரெட்டியபட்டி வழியாக சென்று கல்லூரணியில் சென்று நிறைவுற்றது.

இந்த இருசக்கர வாகன பேரணி விழிப்புணர்வு பிரச்சார இயக்கத்தில் துணை செயலாளர் பெரியண்ணன், மாவட்ட குழு தங்கராஜ், அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாவட்ட பொருளாளர் அருண் சிங், விவசாய சங்க மாவட்ட தலைவர் சங்கரபாண்டி, மற்றும் நிர்வாகிகள் சரத்குமார், மார்க்கண்டேயன் உள்ளிட்ட ஒன்றிய குழு நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ஆர்த்ரெக்ஸ் சினெர்ஜி விஷன் - இந்தியாவில் ஒரு மேம்பட்ட கூட்டு அறுவை சிகிச்சை இமேஜிங் சாதனம்

**சென்னை, ஜூன் 30-**

ஆர்த்ரெக்ஸ் சினெர்ஜி விஷன் ஒரு மேம்பட்ட புரட்சிகரமான கூட்டு அறுவை சிகிச்சை இமேஜிங் சாதனம் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முதல் மூன்று சாதனங்கள் ஹைதராபாத் அகஸ்திய மருத்துவமனை, கேஜஎம்எஸ் சன்ஷைன் மருத்துவமனை மற்றும் மங்களூரில் உள்ள தேஜஸ்வி மருத்துவமனை ஆகியவற்றில் நிறுவப்பட்டுள்ளன. இந்த புதுமையான தொழில்நுட்பம் மேம்பட்ட அறுவை சிகிச்சை இமேஜிங்கை வழங்குகிறது, இது மூட்டு அறுவை சிகிச்சைகளில் துல்லியம், பாதுகாப்பு மற்றும் நோயாளி பராமரிப்பு தரங்களை மறுவரையறை செய்வதாக உறுதியளிக்கிறது. கேஜஎம்எஸ் சன்ஷைன் மருத்துவமனையின் டாக்டர் சந்திரசேகர் பி, இந்த தொழில்நுட்பம் உடற்கூறியல் மற்றும் நோயியலின் சிக்கலான விவரங்களைக் காண அனுமதிக்கிறது. இதனால் சிறந்த நோயாளி விளைவுகளை வழங்க எங்களுக்கு உதவுகிறது.

சினெர்ஜி விஷன் எங்கள் பணிப்பாய்வில் தடையின்றி ஒருங்கிணைக்கிறது, எங்கள் நோயாளிகளுக்கு மிகவும் நிலையான, உயர்தர முடிவுகளை வழங்க உதவுகிறதுஎன்று அதாஸ்த்யா மருத்துவமனையின் டாக்டர் சுமந்த் நாயக் கூறினார். தேஜஸ்வினி மருத்துவமனையின் டாக்டர் சுமந்த் நாயக் கூறுகையில், சினெர்ஜி விஷன் அமைப்பு அறுவை சிகிச்சை நிபுணரின் காட்சிப்படுத்தல் திறன்களை வெகுவாக மேம்படுத்துகிறது, அபாயங்களைக் குறைக்கவும் அறுவை சிகிச்சை நேரங்களைக் குறைக்கவும் உதவுகிறது. அதன் உள்ளுணர்வு இடைமுகம், அதிகரித்த யதார்த்த அம்சங்களுடன் இணைந்து, அறுவை சிகிச்சை நிபுணர்களை நம்பிக்கையுடன் சிக்கலான நடைமுறைகளை வழிநடத்த உதவுகிறது என்று கூறினார்.

## தேவகோட்டை பள்ளியில்

# அறிவியல் செயல் முறை விளக்க நிகழ்ச்சி

**தேவகோட்டை, ஜூன் 30-**

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் கணிதம் , அறிவியல் செயல் முறை விளக்கமளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

ஆசிரியை முத்துமீனாள் வரவேற்றார். தலைமை ஆசிரியர் லெ .சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். பயிற்சியாளர்கள் சேகர், மீனாள் மற்றும் அரங்குவலன் ஆகியோர் கணித உபகரணங்களை கொண்டு கணிதம், அறிவியல் சார்ந்த விளக்கங்களை நேரடி சோதனைகள் மூலம் செய்து காண்பித்து விளக்கினார்கள். அன்றாடம் வாழ்வில் கணிதம், அறிவியல் பயன்பாடு தொடர்பான செயல்முறைகள் போன்றவற்றை செய்து காண்பித்து தெளிவாக விளக்கம் அளித்தனர். மாணவர்கள் கேள்விகள் கேட்டு பதில்கள் பெற்றனர். நிறைவாக ஆசிரிர் ஸ்ரீதர் நன்றி கூறினார்.அ .மு.மு. அறக்கட்டளையினர் ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.

# பேரூராட்சி நிர்வாகத்தை கண்டித்து வத்தலகுண்டுவில் கண்டன ஆர்ப்பாட்டம்



**வத்தலகுண்டு, ஜூன் 30-**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகா வத்தலக்குண்டு அரசு கள்ளர் மாணவர் வெளியில் அமைந்திருக்கும் கள்ளர் கல்விக் கழகத்திற்கு சொந்தமான நிலத்தில் சமுதாயக்கூடம் கட்ட முயற்சிக்கும் வத்தலகுண்டு பேரூராட்சி நிர்வாகத்தையும் மற்றும் நிலக்கோட்டை வருவாய்த்துறை நிர்வாகத்தையும் கண்டித்து வத்தலக்குண்டு பிரமலைக்கள்ளர் வளர்ச்சி சங்கம் சார்பாக மாணவர்களுக்கான கண்டன ஆர்ப்பாட்டம் பிரமலைக்கள்ளர் வளர்ச்சி சங்கத் தலைவர் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்றது.சங்கச் செயலாளர் செந்தில்குமார் வரவேற்று பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் தென்னிந்திய பார்வர்ட் பிளாக் கட்சி நிறுவனத் தலைவர் கே. சி. திருமாறன்ஜி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசியதாவது:- கள்ளர் சீரமைப்பு துறை. அந்தத் துறைக்கு தேவையான நிலம் சொத்து, நிதி அனைத்தும் வழங்கியது எங்கள் பாட்டன், முப்பாட்டன், எங்களது முன்னோர்கள் அதில் உருவான பள்ளிகள் தான் கள்ளர் பள்ளிகள். அப்படிப்பட்ட இடம் எங்கள் முன்னோர்களால் கள்ளர் கல்விக் கழகத்தின் பெயரில் வாங்கப்பட்ட சொத்து அந்த இடத்தில் வத்தலக்குண்டு பேரூராட்சியும் நிலக்கோட்டை வருவாய்த் துறை நிர்வாகமும் கையகப்படுத்தி அரசு சமுதாயக்கூடம் கட்டினால் விடுதியில் பயிலும் மாணவர்களின் எதிர்காலம் பல்வேறு வகையில் பாதிக்கப்படும். இந்த முயற்சியை உடனடியாக அரசு அதிகாரிகள் கைவிடவில்லை என்றால் வத்தலகுண்டில் மிக விரைவில் சாலை மறியல் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்கள் நடத்தப்படும் என பேசினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி மாநில பொதுச் செயலாளர், உசிலம்பட்டி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி வி கதிரவன் சிறப்புரையாற்றினார். மாயாண்டி குடும்பத்தார் இயக்குனரும் நாயகனுமான தருண் கோபி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். சங்க பொருளாளர் பாண்டியன், அரசு கள்ளர் மாணவர் விடுதி உறுப்பினர் பாலு தேவர், சங்க வழக்கறிஞர் அணி ஒருங்கிணைப்பாளர் கார்த்திக் குமார், கள்ளர் பள்ளி பாதுகாப்பு குழு தலைவர் அன்பு கிறிஸ்டியான், நிலக்கோட்டை பிரமலைக் கள்ளர் கூட்டமைப்பு மாநில பொதுச் செயலாளர் ராஜாராம், மாநில பொருளாளர் இளங்கோ, அனைத்து கள்ளர் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் தியாகராஜன், டி.என்.டி கட்சி நிறுவனத் தலைவர் அன்பழகன், இந்திய மக்கள் பார்வர்ட் பிளாக் கட்சி மாநில பொதுச் செயலாளர் நேதாஜி, வழக்கறிஞர் அணி மாநில செயலாளர் போஸ், உள்ளிட்ட சுமார் 300-க்கும் மேற்பட்ட பிரமலைக்கள்ளர் இன மக்கள் திரண்டு போராட்டம் நடத்தினார்கள். சுமார் 50க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டு இருந்தனர். இதன் காரணமாக பரபரப்பு ஏற்பட்டது.

Printed Published and Owned
by **S.Manimaran,**
Printed at Manimaran
Printers at **9**, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
**RNI Regn. No.61494 / 94**

# திருநெல்வேலியில் 10 நிமிடங்களில் பிக்பாஸ்கெட் டெலிவரி

**திருநெல்வேலி, ஜூன் 30-**

பிக்பாஸ்கெட் (டாடா குழும நிறுவனம்) தனது துரித டெலிவரி சேவையை திருநெல்வேலியில் அறிமுகப்படுத்தியுள்ளது. இது திருநெல்வேலி மக்களின் ஷாப்பிங் அனுபவத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்து செல்லும். இப்போது திருநெல்வேலி மக்கள் பசுமையான காய்கறி பழங்கள் முதல் மின்னணு மற்றும் வீட்டு உபயோக சாதனங்கள் உட்பட 10,000-க்கும் மேற்பட்ட பொருட்களை 10 நிமிடங்களுக்குள் பிக்பாஸ்கெட் செயலியின் மூலம் டெலிவரி பெற்றுக் கொள்ள முடியும். இந்த துரித டெலிவரி சேவை திருநெல்வேலி மக்களுக்கு ஒரு புதிய அனுபவத்தை உருவாக்கி, வாடிக்கையாளர்கள் தங்கள் வீட்டில் இருந்தே மளிகைப் பொருட்களை முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் எளிதாகக் ஆர்டர் செய்ய உதவுகிறது.

இது குறித்து தேசிய வர்த்தகத்தின் தலைவர் சசி சேகர் கூறுகையில், தற்போது திருநெல்வேலி மாநகருக்கு பிக்பாஸ்கெட்டை அறிமுகம் செய்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எங்களது சமீபத்திய விரிவாக்கங்கள் அனைத்து தரப்பு மக்களிடமும் வரவேற்பைப் பெற்றுள்ளன. மேலும் திருநெல்வேலி நகரவாசிகள் 10 நிமிட டெலிவரி வசதியைப் வெகுவாக பாராட்டுவார்கள் என்றும், அதனால் அவர்கள் பெரிய அளவில் பயனடைவார்கள் என்றும் நாங்கள் திடமாக நம்புகின்றோம். இன்றைய வேகமாக மாறிவரும் வாழ்க்கை முறையின் தேவைகளை நிறைவு செய்வதன் மூலம் வாடிக்கையாளர் மனநிறைவை அதிகரிப்பதற்கான நமது முயற்சி வெகுவாக பயனளிக்கும் என்று கூறினர்.

**வாக்களிப்பது நமது கடமை**

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three months thereafter, I, **PL. PRAGATHISHVARI,** D/o. **R. Palaniyappan,** Date of Birth: **13-10-2002**, Permanently residing at **148, South Street, K.Nerpugapatti, Chettinad Po, Karaikkudi, Sivaganga Dist, Tamil Nadu - 630 102** intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu & Puducherry Bar Council Buildings High Court Campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

**PL. PRAGATHISHVARI**

**ENROLMENT NOTICE**

**After ten days of the publication of this notice and within three months thereafter I, B.PREETHI, D/O, T. BALAMURUGAN, Aged 25, Permanently residing at No: 14/20, JEEVA NAGAR, EAST STREET, BODINAYAKANUR - 625513, Theni District intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puduchery, Bar Council Buildings, High Court Campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.**

**B.PREETHI**

**வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், பழனி**
**ந.க.எண் : 1352/2025**

கண்ணகி
க/பெ.சுப்பையா
கோதைமங்கலம் கிராமம்,
பழனி வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.
--- மனுதாரர்
-எதிர்-
உயர்திரு வருவாய்
கோட்டாட்சியர் நீதிமன்றம்
---எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய நான் எனது கணவர் சுப்பையா என்பவர் மேற்படி முகவரியில் கடந்த 07.09.2014 ம் தேதி வயது மூப்பின் காரணமாக இறந்துவிட்டார். மேற்படி இறப்பினை பதிவு செய்து உத்திரவிட வேண்டி பழனி வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளதில் எவருக்கேனும் அட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் ஆஜராகி தங்களது ஆட்சேபனையினை தெரிவித்துக்கொள்ளலாம்.

மனுதாரர் வழக்கறிஞர் முகவரி
B.உதயசங்கர்.M.A.,B.L.,
D.2.சக்தி ஏடிஎம்,
வளாகம் , முதல்மாடி
பாரத ஸ்டேட் வங்கி எதிரில்
தலைமை தபால் நிலையம் அருகில்
பழனி - 624601

**வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், பழனி**
**ந.க.எண் : 1354/2025**

சு.ரமேஷ்
த/பெ.சுப்பையா
கோதைமங்கலம் கிராமம்,
பழனி வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.
--- மனுதாரர்
-எதிர்-
உயர்திரு வருவாய்
கோட்டாட்சியர் நீதிமன்றம்
---எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய நான் எனது தாத்தா சீரங்கன் செட்டியார் என்பவர் மேற்படி முகவரியில் கடந்த 13.10.2013 ம் தேதி வயது மூப்பின் காரணமாக இறந்துவிட்டார். மேற்படி இறப்பினை பதிவு செய்து உத்திரவிட வேண்டி பழனி வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளதில் எவருக்கேனும் அட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் ஆஜராகி தங்களது ஆட்சேபனையினை தெரிவித்துக்கொள்ளலாம்.

மனுதாரர் வழக்கறிஞர் முகவரி
B.உதயசங்கர்.M.A.,B.L.,
D.2.சக்தி ஏடிஎம்,
வளாகம் , முதல்மாடி
பாரத ஸ்டேட் வங்கி எதிரில்
தலைமை தபால் நிலையம் அருகில்
பழனி - 624601

**வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், பழனி**
**ந.க.எண் : 1353/2025**

சு.ரமேஷ்
க/பெ.சுப்பையா
கோதைமங்கலம் கிராமம்,
பழனி வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.
--- மனுதாரர்
-எதிர்-
உயர்திரு வருவாய்
கோட்டாட்சியர் நீதிமன்றம்
---எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய நான் எனது பாட்டி பொம்மாயி என்பவர் மேற்படி முகவரியில் கடந்த 01.12.2015 ம் தேதி வயது மூப்பின் காரணமாக இறந்துவிட்டார். மேற்படி இறப்பினை பதிவு செய்து உத்திரவிட வேண்டி பழனி வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளதில் எவருக்கேனும் அட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் ஆஜராகி தங்களது ஆட்சேபனையினை தெரிவித்துக்கொள்ளலாம்.

மனுதாரர் வழக்கறிஞர் முகவரி
B.உதயசங்கர்.M.A.,B.L.,
D.2.சக்தி ஏடிஎம்,
வளாகம் , முதல்மாடி
பாரத ஸ்டேட் வங்கி எதிரில்
தலைமை தபால் நிலையம் அருகில்
பழனி - 624601

